**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்**

**முன்னிலை: திரு.சு.அருண்சங்கர், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)**
**முதுகுளத்தூர்.**
**2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15ம் நாள் வியாழக்கிழமை.**

**IA No. 112/2022**
**in**
**OS.No.17/2021**

1. P.சாத்தாயி,
2. P.குமார். ......**மனுதார்கள்/பிரதிவாதிகள்**

**/எதிர் /**

1. U.கர்ணன்,
2. U.பால்துரை. ...... **எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இந்த மனு கடந்த 01.12.2022 அன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கரு.பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், முன்னிட்ட வாதத்தின் அடிப்படையிலும் மனு, எதிர் உரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>உத்தரவு</u>**

**01.** இந்த மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதிகள் 13ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02.மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்**

வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ததில், எங்கள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்காக இறுதியாக கடந்த 04.08.2022 ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்தது. மேற்படி வாய்தா தேதியில் எங்களது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் எங்களுக்கு எதிராக Exparty உத்தரவு ஏற்பட்டுவிட்டது. வயது முதிர்ந்த எனக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. மேலும் 2 ம் பிரதிவாதியான எனது பிழைப்பு நிமித்தம் வெளியூரில் இருந்ததாலும் சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி வாய்தா தேதியில் எங்களால் ஆஜராக இயலாமல் போய்விட்டது. மேற்படி வாய்தா தேதியில் நாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகாமை வேண்டுமென்றே அல்ல. அது தெய்வாதீனமான ஏற்பட்ட ஒன்றாகும். எனவே மேற்படி 04.08.2022 ம் தேதி எங்களுக்கு எதிராக ஏற்பட்ட Exparty உத்தரவை Set aside செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது. இல்லாவிட்டால் எனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். மேற்படி வழக்கை Set aside செய்வதால் வாதிகள்/எதிர்மனுதார்களுக்கு எந்த இழப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. இத்துடன் எங்கள் தரப்பு எதிர் வழக்குரையை தாக்கல் செய்து வழக்கை மேல் நடத்த தயாராக உள்ளோம். ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து அசல் வழக்கில் கடந்த 04.08.2022 ம் தேதி எனக்கு எதிராக Exparty செய்யப்பட்டு ஏற்பட்ட உத்தரவை Set aside செய்துகொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரர்கள்

இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

## 03. எதிர்மனுதாரர்களின் எதிர் உரை சுருக்கம்

மனுதார் மனுவில் கோரியுள்ள எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுதார் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாகும். மனு அபிடவிட்டு நிலை நிற்கதக்கதல்ல. மனுவில் தாவா வழக்கில் கடந்த வாய்தா தேதியில் ஆஜராக இயலாமைக்கு மனுதார் கூறியுள்ள காரணம் மோசடியானதும் நீதிமன்றத்தினை ஏமாற்றவே பொய்யான காரணங்களை கூறியுள்ளார். தாவா வழக்கானது வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிந்த நிலையில் வாதிகள் உரிய உத்திரவு பெறக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் மனுதார் தரப்பில் தாவா மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே அது நிலைநிற்கதக்கதல்ல.

மனுவில் மனுதார் கூறிய சங்கதிகளை மனுதார் தரப்போ கண்டிப்பாய் நிரூபணம் செய்ய வேண்டும். அது உண்மையில்லை. மனுதார் இந்த எதிர்மனுதாரர்களின் கிரைய பாத்திய சொத்தில் மோசடி ஆவணங்களையும் பதிவில்லாத ஆவணங்களையும் தயார் செய்து அதன் மூலம் எதிர்மனுதாரர்களுக்கு உரிய பரிகாரம் கிடைக்க கூடாது என்பதிற்காக காலதாமதம் செய்து அதன் மூலம் எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படுத்தவே மோசடியான காரணங்களை துலக்கி தாவா மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவினை அனுமதிக்கும் பட்சம் அது நீதிக்கு உகந்ததாக இருக்காது என்பதால் மனுதாரர் மனு தள்ளுபடி செய்யக்கூடியதாகும்.

சமூகம் நீதிமன்றம் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கலாம் என ஒரு முடிவிற்கு வரும் பட்சம் மனுதாரரின் மனுவினை இந்த எதிர்மனுதார் தரப்பு அதிகபட்ச செலவு தொகையுடன் அனுமதிப்பதோடு தாவா வழக்கினை விரைவாக முடிக்க காலவரையறை நிர்ணயம் செய்து அதற்கு மனுதாரர் முழு ஒத்துழைப்பு கொடுக்க நிபந்தமையுடனான உத்திரவினை பிறப்புவிக்க வேண்டியதாய் இருக்கிறது. இல்லாது போனால் இந்த எதிர்மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு அதன் தொடர்ச்சியான ஈடு செய்ய இயலாத பேரிழப்பு ஏற்பட்டு போய்விடும். ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரர் தரப்பு மனுவினை இந்த எதிர்மனுதார் தரப்பு அதிக பட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவு செய்யவேண்டி பிரார்த்திக்கப்படுகிறது.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதை இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் ஆகும்.**

04)<u>தீர்வு:</u>

கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

மனு மற்றும் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களையும் இம்மனு அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்/வாதிகளுக்கு எந்தவிதமான நஷ்டமோ இழப்போ ஏற்படப்போவதில்லை என்பதை கருத்தில் கொண்டும் மனுதாரர்/ பிரதிவாதிகள் தங்களது தரப்பு ஆவணங்கள் மற்றும் வாதத்தை முன்

நிறுத்துவதற்கு மேலும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதி எதிர்மனுதாரர் /வாதிகளுக்கு ரூ.2000/- செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

05) முடிவாக

முடிவாக வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் இம்மனுத்தாக்கல் செய்த காலகட்டத்தை கருத்தில் கொண்டு மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ரூ. 2000/-த்தை 21.12.2022 ஆம் தேதித்குள் செலுத்த வேண்டுமென்றும், செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்று உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் கணினி தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் கணினியில் வைத்தே பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022ம் வருடம் டிசம்பர் மாதம் 15ம் தேதி வியாழக்கிழமை அவையறிய பகரப்பட்டது.

S ARUN SANKAR

Digitally signed by S ARUN SANKAR
Date: 2022.12.15 16:14:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
முதுகுளத்தூர்.

<u>பின் இணைப்புகள்</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:–</u> இல்லை

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u> இல்லை

S ARUN SANKAR

Digitally signed by S ARUN SANKAR
Date: 2022.12.15 16:14:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
முதுகுளத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

முதுகுளத்தூர்.

இடைநிலை மனு எண்.112/2022
இன்
அசல் வழக்கு எண்.17/2021
சீரான உத்தரவு

நாள்: 01.12.2022.